# டிபிகேஎல் அதிகாரிக்கு 400 ரிங்கிட்
# கையூட்டு வழங்க முற்பட்ட
## அந்நியப் பிரஜைக்குத் தடுப்புக் காவல்

கோலாலம்பூர், ஆக. 12-
மருந்தக வியாபாரம் நடத்தப்பட்டு வந்த தமது தளத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க கோலாலம்பூர் மாநகர்மன்ற (டிபிகேஎல்) அதிகாரிக்கு 400 ரிங்கிட் கையூட்டு வழங்க முற்பட்ட அந்நிய நாட்டைச் சேர்ந்த விற்பனை முகவர் ஒருவரை மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் தடுப்பு காவலில் வைத்துள்ளது.

30 வயது மதிக்கத்தக்க அந்த ஆடவரை இம்மாதம் 14ஆம் தேதி தடுப்பு காவலில் வைப்பதற்கு மாஜிஸ்திரேட் ஷாரில் ஃபர்ஹானா உத்தரவிட்டுள்ளார்.

கோலாலம்பூரில் 2 மாடி கடை வீட்டில் எந்தவோர் உரிமமும் இன்றி அந்நியப் பிரஜைகள் மருந்தகம் நடத்தி வந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த தளத்தில் சோதனை மேற்கொள்ளப்படும்போது அங்கிருந்த அந்நியப் பிரஜை வர்த்தக உரிமத்தைக் காட்டத் தவறியுள்ளார். அதுமட்டுமன்றி




சட்ட நடவடிக்கை எடுக்காமலிருக்க 400 ரிங்கிட் கையூட்டு வழங்க முற்பட்டதாகவும் நம்பத்தக்க வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அந்த கைது நடவடிக்கை கோலாலம்பூர் எம்ஏசிசி இயக்குநர் டத்தோ முகமட் ஃபவுஸி உசேன் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், 2009 மலேசிய ஊழல் தடுப்பு ஆணையச் சட்டம் பிரிவு 17(பி) இன் கீழ் இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.